சுருக்கம்

பணியமைப்பு – நெடுஞ்சாலைத்துறை – தமிழ்நாடு நெடுஞ்சாலை பொறியியல் பணி – கண்காணிப்புப் பொறியாளர்கள் பணியிட மாறுதல் மற்றும் 2017 – 2018 ஆம் ஆண்டிற்கான தேர்ந்தவர்கள் பெயர் பட்டியலில் உள்ள கோட்டப் பொறியாளர்களுக்கு கண்காணிப்புப் பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

**நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் (எச்.கே. 1) துறை**

**அரசாணை (டி) எண். 208** **நாள் 01.08.2018**

**விளம்பி, ஆடி – 16, திருவள்ளுவராண்டு 2049**

படிக்கவும்:

1. அரசாணை (நிலை) எண்.63, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.கே.1) துறை, நாள்.18.08.2017
2. அரசாணை (டி) எண். 203, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.கே1) துறை, நாள் 18.08.2017
3. முதன்மை இயக்குநர் அவர்களின் கடித எண்.503 / கமுக்கம்1 / 2018 நாள்:27.07.2018.

********

**ஆணை:**

மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் நெடுஞ்சாலைத் துறையின் முதன்மை இயக்குநர் அவர்கள் நிர்வாக காரணங்களின் அடிப்படையில் கண்காணிப்புப் பொறியாளர்கள் பணியிடமாறுதல் மற்றும் கோட்டப் பொறியாளர்களை பதவி உயர்வில் கண்காணிப்புப் பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான கருத்துருக்களை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை அவர்களின் கருத்துருவினை ஏற்று நிர்வாக காரணங்களுக்காக கீழ்க்கண்டவாறு பணிமாறுதல் ஆணைகள் வெளியிடப்படுகின்றன:

| வ. எண். | பெயர் மற்றும் பதவி (திருவாளர்கள்) | பணியமர்வு செய்யப்படும் பணியிடம் |
|---|---|---|
| 1. | கே.சேகர்<br>கண்காணிப்புப் பொறியாளர்(நெ), திட்டங்கள், சென்னை | கண்காணிப்புப் பொறியாளர் (நெ)<br>சென்னை–கன்னியாகுமாரி, தொழிற்தட சாலை திட்டம் (CKICP),<br>காஞ்சிபுரம் (புதிய பணியிடம்) |
| 2. | என்.பூவானந்தம்<br>கண்காணிப்புப் பொறியாளர் (நெ)<br>கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, திருநெல்வேலி | கண்காணிப்புப் பொறியாளர் (நெ)<br>சென்னை–கன்னியாகுமாரி, தொழிற்தட சாலை திட்டம் (CKICP),<br>திருச்சி (புதிய பணியிடம்) |

3. மேலும், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2017–2018 ஆம் ஆண்டிற்கான கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வுக்கு தகுதிபெற்ற 10 கோட்டப் பொறியாளர்களின் தற்காலிக தேர்ந்தவர் பெயர் பட்டியலுக்கு ஒப்புதல் அளித்து ஆணை வழங்கப்பட்டது. அப்பெயர் பட்டியலில் இடம் பெற்றுள்ள வரிசை எண்.1 முதல் 5 வரை உள்ள 5 கோட்டப் பொறியாளர்களுக்கு மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் பதவி உயர்வு வழங்கப்பட்டுவிட்டது. தற்போது உள்ள காலிபணியிடங்களை கருத்தில் கொண்டு, 2017–2018 ஆம் ஆண்டிற்கான கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வுக்கு தகுதிபெற்ற கோட்டப் பொறியாளர்களின் தற்காலிக தேர்ந்தவர் பெயர் பட்டியலில் இடம்பெற்றுள்ள வரிசை எண்.6 முதல் 9 முடிய உள்ள கோட்டப் பொறியாளர்களுக்கு கண்காணிப்புப் பொறியாளர்களாக பதவி உயர்வளித்து கீழ்க்கண்டவாறு அமர்த்தாணை வெளியிடப்படுகிறது:

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | கண்காணிப்பு பொறியாளராக பதவி உயர்வில் பணியமர்வு செய்யப்படும் பணியிடம் |
|---|---|---|
| 1. | ஆர். சரவணன் | கண்காணிப்புப்பொறியாளர்,<br>தேசிய நெடுஞ்சாலை, சேலம்.<br>(திரு.என்.பாலமுருகன்,<br>கண்காணிப்புப்பொறியாளர்(நெ) அவர்கள் தலைமைப்பொறியாளராக பதவி உயர்வு பெற்றதால் ஏற்பட்ட காலிப்பணியிடம்) |
| 2. | டி. சாந்தி | கண்காணிப்புப் பொறியாளர் (நெ)<br>கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, திருநெல்வேலி<br>(திரு. என்.பூவானந்தம்,<br>கண்காணிப்புப் பொறியாளர் (நெ) அவர்கள் பணியிட மாறுதலில் செல்வதால் ஏற்படும் காலிபணியிடம்) |
| 3. | பி. மாரிமுத்துராஜன் | கண்காணிப்புப் பொறியாளர் (நெ),<br>சென்னை எல்லை சாலை(CPRR), சென்னை<br>(புதிய பணியிடம்) |
| 4. | பி. சுப்பிரமணியன் | கண்காணிப்புப் பொறியாளர்(நெ),<br>திட்டங்கள், சென்னை<br>(திரு. கே.சேகர், கண்காணிப்புப் பொறியாளர் (நெ) அவர்கள் பணியிட மாறுதலில் செல்வதால் ஏற்படும் காலிபணியிடம்) |

4. மேலும், தற்போது கோட்டப் பொறியாளர் பதவியிலிருந்து கண்காணிப்புப் பொறியாளர்களாக பதவி உயர்வு பெறும் மேற்காணும் 4 கோட்டப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்களாக பதவி உயர்வில் பணியில் சேரும் நாள் முதல் கண்காணிப்புப் பொறியாளர் பதவியில் ஊதியம் நிர்ணயிக்கப்பட ஏதுவாக அரசு கடித எண். 8119 / அ.வி.II / 1 / 1980, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்.30.4.1980–ன் படி அவர்கள் கண்காணிப்புப் பொறியாளர்களாக பதவியை வகிக்க தேவையான அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்துள்ளார்கள் எனச் சான்றளிக்கப்படுகிறது.

5. இந்த பதவி உயர்வானது தற்காலிகமானது. எந்த ஒரு முன்னறிவிப்புமின்றி கீழ் நிலைப் பதவிக்கு இவர்கள் பணி இறக்கம் செய்யப்படலாம். இந்த தற்காலிக பதவி உயர்வு காரணமாக மட்டும் தனியர்கள் கண்காணிப்புப் பொறியாளர்களாக நிரந்தர பணி நியமனம் செய்ய உரிமை கோர இயலாது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ராஜீவ் ரஞ்சன்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
தனியர்கள் (முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை–25 வழியாக)
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை–25.
தலைமைப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, நெடுஞ்சாலைத் துறை, சென்னை– 25.
தலைமைப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, சென்னை– 25.
தலைமைப் பொறியாளர், திட்டங்கள், நெடுஞ்சாலைத் துறை,சென்னை– 25.
தலைமைப் பொறியாளர், திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு, நெடுஞ்சாலைத் துறை, சென்னை– 25.
தலைமைப் பொறியாளர், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், நெடுஞ்சாலைத் துறை, சென்னை– 25.
திட்ட இயக்குநர், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம், சென்னை–28
மாநில கணக்காயர், சென்னை – 9/18.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை.

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9 .
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்அவர்களின் தனிச் செயலர்,
நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9.
கோ.எண்.10674 / எச்.கே.1 / 2018
உதிரி நகல் / இருப்புக் கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
1.8.17.